செ.கு.எண் : 77 நாள் : 15.03.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

இரங்கல் செய்தி – 15.3.2013

காவேரி டெல்டா விவசாய சங்க குழுமத்தின் மாவட்டத் துணை தலைவரும், தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஒன்றியம், கடம்பங்குடி ஊராட்சியின் முன்னாள் தலைவருமான திரு. திருவையாறு நவரோஜி சோழகர் அவர்கள் 14.3.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

திரு. திருவையாறு நவரோஜி சோழகர் அவர்கள் காவேரி டெல்டா விவசாயிகளின் உரிமைக்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்தார் என்று சொன்னால் மிகையாகாது. அவரது மறைவு காவேரி டெல்டா சங்க குழுமத்திற்கும், காவேரி டெல்டா பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

திரு. திருவையாறு நவரோஜி சோழகர் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினர் அனைவருக்கும், காவேரி டெல்டா பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை